**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)

| | |
|---|---|
| Case No. | : CC No.53/2023 |
| Deposition of witness for Prosecution | : P.W-8 |
| Name | : சுப்பாராஜ், வயது 57 |
| Father Name/Husband Name | : அம்மையநாயக்கர் |
| Village | : கோவில்பட்டி |
| Taluk | : கோவில்பட்டி |
| Calling | : உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of September 2024.

**(எதிரி ஆஜர்.)**

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது கொப்பம்பட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வளாராக பணியில் உள்ளேன். 21.08.2022 ஆம் தேதி நாலாட்டின்புதூர் காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது 21.30 மணிக்கு ராமலிங்கபுரத்தை சேர்ந்த ராஜேந்திரன் மனைவி மாரியம்மாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவைப் பெற்று நிலைய குற்ற எண்.181/2022 பிரிவுகள் 279, 304-A IPC ஆக வழக்கு பதிவு செய்தேன்.
2. **நான் பதிவு செய்த அசல் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுறகிறது.** அசல் முதல் தகவல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை விசாரணை அதிகாரியின் பார்வைக்கு வைத்தேன். வழக்கு பற்றி விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. அ.சா.1 கொடுத்த புகார் மனுவை பெற்று வழக்கு பதிவு செய்து முடிக்க எவ்வளவு நேரம் ஆனது என்றால் அரை மணிநேரம். விசாரணை அதிகாரியான பொறுப்பு ஆய்வாளர் உங்கள் காவல் நிலையத்தில் இருந்தாரா கழுகுமலை காவல் நிலையதில் இருந்தாரா என்றால் கழுகுமலை காவல் நிலையத்தில் இருந்தார்.
2. முதல் தகவல் அறிக்கை பற்றிய தகவலை நேரடியாக கொடுத்தீர்களா அல்லது போன் மூலம் தகவல் சொன்னீர்களா என்றால் போன் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர் எவ்வளவு நேரம் கழித்து பெற்றுக்

கொண்டார் என்றால் அரை மணிநேரம் கழித்து வந்து பெற்றுக் கொண்டார். சம்பவ இடத்தில் இருந்து காவல் நிலையம் எவ்வளவு கி.மீ தூரம் என்றால் 7 கி.மீ. சம்பவம் எத்தனை மணிக்கு நடந்ததாக முதல் தகவல் அறிக்கை படி உங்களுக்கு தெரியவந்தது என்றால் 07.15 சம்பவம் நடந்துள்ளதாக தெரியவந்தது.

3. 07.15 மணிக்கு சம்பவம் நடந்துள்ள நிலையில் 09.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ள நிலையில் இடைப்பட்ட நேரத்தில் சம்பவம் பற்றி போலிசார் யாரும் உங்களுக்கு தகவல் சொன்னார்களா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் இருந்து போலிசார் உங்களுக்கு தகவல் சொன்னார் என்றாலும் நீங்கள் வழக்கிற்காக மறைத்துவிட்டீர்கள் என்றாலும் சரியல்ல.
4. நீங்கள் சொன்ன நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் முதல் தகவல் அறிக்கையை பின்னிட்டு பதிவு செய்துள்ளீர்கள் என்றாலும் சரியல்ல. வழக்கிறக்காக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.